சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள வீடற்ற 500 தூய்மை பணியாளர் உறுப்பினர்களுக்கு, தகுதியின் அடிப்படையில் ரூ.55.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் கட்டப்படும் பயனாளிகள் பங்களிப்புடன் கூடிய வீடுகள் வாங்க மானியம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.6)துறை

அரசாணை (நிலை) எண். 84

நாள்: 07.07.2023
சோபகிருது ஆண்டு
ஆனி 22-ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கப்பட்டது.

உறுப்பினர் செயலர், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் கடிதம் ந.க.எண்.H1/4236/2022, நாள் 28.04.2023.

*********

ஆணை :-

2023-2024-ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவை வரவு-செலவு கூட்டத் தொடரில் மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்கள் கீழ்க்காணும் புதிய அறிவிப்பினை வெளியிட்டுள்ளார் :-

"தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள வீடற்ற 500 உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வீடுகள் தூய்மைப் பணியாளர் நல வாரிய மானியத்துடன் ரூ.55 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்."

(த.பி.பா)

2. மேலே பத்தி 1-இல் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படியும் மற்றும் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் அவர்களிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரையின் அடிப்படையிலும், கீழ்கண்ட தகுதிகளை பயனாளிகள் பெற்றிருப்பதுடன் அதற்கான வழிமுறைகளையும் பின்பற்ற வேண்டும் :-

i. இந்தத் திட்டத்தில் பயன்பெற தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தில், வாரிய அட்டை பெற்று 5 ஆண்டுகளுக்கு பின் முறைப்படி அட்டையினை புதுப்பித்து தற்போது அடையாள அட்டை நடைமுறையில் இருக்க வேண்டும்.

ii. பதிவு செய்யப்பட்ட உறுப்பினர் அல்லது அவரது குடும்பத்தினரோ வேறு எந்த கான்கிரீட் வீடுகளையும் சொந்தமாக வைத்திருக்கக் கூடாது. மேலும் அரசு மூலம் வேறு எந்த வகையிலாவது வீடு ஒதுக்கீடு செய்து ஏற்கனவே பெற்றிருக்கக்கூடாது. முன்மொழிவு பயனாளியின் ஆண்டு வருமானம் ரூ.3,00,000/- க்கு குறைவாக இருக்க வேண்டும்.

iii. பதிவு மூப்பின் அடிப்படையில் தகுதியான பயனாளிகள் பற்றிய விவரங்களான பயனாளியின் பெயர், முகவரி, பதிவு எண், ஆதார் எண், வங்கி கணக்கு எண், பதிவிற்கான காலம், மற்றும் இதர விவரங்களை மாவட்ட மேலாளர் (தாட்கோ) வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

iv. அந்தந்த மாவட்ட மேலாளர்கள் (தாட்கோ), பயனாளிகள் வேறு எந்த அரசு திட்டத்தின் கீழும் வீட்டுத்திட்ட உதவியைப்பெறவில்லை என ஒவ்வொரு விண்ணப்பத்தையும் உரிய உள்ளாட்சி பிரதிநிதிகளின் உதவியுடன் பரிசீலித்து உரிய சரிபார்ப்பிற்கு பிறகு, கீழ்கண்ட மாவட்ட ஆட்சியர் தலைமையிலான ஒப்புதல் குழுவிற்கு (Approval Committee) அனுப்பி, அதற்கான ஒப்புதல் பெற வேண்டும்.

- மாவட்ட ஆட்சியர்
- மாநகராட்சி ஆணையர் / நகராட்சி ஆணையர் / பேரூராட்சி உதவி இயக்குநர் (மாநகராட்சி/ நகராட்சி / பேரூராட்சி / ஊராட்சி பகுதியில் வீடு வழங்குதல்)
- மாவட்ட மேலாளர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (தாட்கோ)
- மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர்

3. மேலே படிக்கப்பட்ட உறுப்பினர் செயலர், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் அவர்களின், 28.04.2023 நாளிட்ட கடிதத்தில், தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற, சொந்தமாக வீடு இல்லாத உறுப்பினர்களுக்கு, பதிவு மூப்பின் அடிப்படையில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் ஏற்கனவே, கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில்

ஒதுக்கீடு பெற 2023-2024-ம் ஆண்டிற்கு நிதியுதவி மாநில அரசு ரூ.55.00 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கான நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கான நிதி ஒப்புதல் அரசாணை வழங்குமாறு கோரியுள்ளார்.

4. மேலே பத்தி எண் 3, இல் உள்ள உறுப்பினர் செயலர், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் அவர்களின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்று சொந்தமாக வீடு இல்லாத, பதிவு மூப்பின் அடிப்படையில், வாரிய உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில், ஒதுக்கீடு பெற முதற்கட்டமாக 500 உறுப்பினர்களை மாவட்ட வாரியாக தேர்ந்தெடுத்து, அம்மாவட்டத்தில் உள்ள நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளின் விலைகளின் அடிப்படையில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள பயனாளியின் பங்குத்தொகையில், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் மானியமாக 90%-ம் மற்றும் மீதமுள்ள 10% பயனாளி தனது பங்கு தொகையாக ஏற்க வேண்டும். தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள பங்கு தொகை போக மீதி உள்ள தொகையை அரசு மானியமாகவோ அல்லது ஒன்றிய அரசு மானியம் 1.50 இலட்சம், மாநில அரசு மானியம் 7.00 இலட்சம் ஆக மொத்தம் 8.50 இலட்சம் மானியம் இதில் எது குறைவான தொகையோ, மாவட்டத்திற்கேற்றார் போல் அத்தொகையையே மானியமாக வரவு வைத்துக்கொள்ளலாம். அதன்படி 500 வீடுகளுக்கு அரசு மானியமாக ரூ.55.00 கோடி மானியம் அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

5 இவ்வாணை அரசாணை (நிலை) எண். 519, நிதி(சம்பளங்கள்)த் துறை, நாள் 29.09.1997-இன்படி நிதித்துறையின் ஒப்புதலின்றி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. லட்சுமி பிரியா,
அரசு செயலாளர்

<u>பெறுநர்:-</u>

கூடுதல் தலைமைச் செயலாளர் / முதன்மைச் செயலாளர் / செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.

உறுப்பினர் செயலர், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் ,
சென்னை-600 008.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
துணைத்தலைவர்,
தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நலவாரியம், சென்னை -600 008.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், சென்னை -600 005.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
மாவட்ட மேலாளர்கள் (தாட்கோ).
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-600 005.
முதன்மை கணக்காயர் (G &SSA), சென்னை-600 018.
மாநில கணக்காயர், சென்னை- 600 009 / 18 / 35.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை- 600 009.

<u>நகல்:-</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
அமைச்சர் (ஆதிதிராவிடர் நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
செயலாளரின் தனிச்செயலர், சென்னை-600 009.
நிதித்(ஆதி(ம)பந) துறை, சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந5) துறை, சென்னை- 600 009.
சிறப்பு திட்டம் செயலாக்கத் துறை, சென்னை - 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கா. செல்வராணி
07/07/2023
பிரிவு அலுவலர்
07/07/23